தினமணி

## கோடையில் கால்நடை பராமரிப்பு

First Published : 10 May 2012 11:01:09 AM IST

செய்யாறு: கோடை காலத்தில் குறிப்பாக ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையில் கால்நடைகளுக்கு ஏற்படும் வெப்ப அதிர்ச்சி உள்ளிட்ட பாதிப்புகளைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து கால்நடை மருத்துவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

கடும் வெப்பம் நிலவும் பகல் நேரத்தில் மர நிழலிலோ அல்லது காற்றோட்டமான நிழலுடன் கூடிய திறந்தவெளியிலோ கால்நடைகளைக் கட்டி வைக்க வேண்டும். கால்நடைகளின் மேல் தண்ணீர் தெளித்து கழுவுவதன் மூலம் உடல் வெப்பத்தைக் குறைக்கலாம். அதிக அளவு குளிர்ந்த குடிநீரை அளிப்பதன் மூலமும் உடல் வெப்பத்தைக் குறைக்கலாம்.

பண்ணைகளில் மின்விசிறிகளை பொருத்தலாம். கொட்டிலின் மீது ஈரப்பதம் கொண்ட படல்களை தொங்கவிடுவதன் மூலமும் வெயிலின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும் பொழுது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. பொதுவாக அதிகாலையில் மேய்ச்சலுக்கு அனுப்பி கடும் வெயில் ஆரம்பிக்கும் முன் பண்ணைக்கு கொண்டு வந்துவிட வேண்டும். பசுந்தீவனத்தை அதிகம் அளிப்பதன் மூலம் உடலில் நீர் சத்தின் அளவை அதிகரிக்கலாம்.

மாடுகளுக்கு கருவூட்டல் செய்யும் பொழுது வெப்பம் தாழ்ந்த நேரத்தில் செய்தல் வேண்டும். கருவூட்டல் செய்த பிறகு மாடுகளை சிறிது நேரம் நிழலில் கட்டிவைத்துவிட்டு பிறகு ஓட்டிச் செல்லுதல் நல்லதாகும்.

இவ்வாறு பராமரிக்கவில்லையென்றால் வெப்ப அதிர்ச்சியால் (ஏங்ஹற் நற்ழ்ர்ந்ங்) கால்நடைகள் பாதிக்கப்படும். மூச்சிரைப்பும், இதயப் படபடப்பும் காணப்படும். நாடித்துடிப்பு பலவீனமாக இருக்கும். கருவுற்ற கால்நடைகளில் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

வெப்ப அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் மேல் குளிர்ந்த நீரைத் தெளிக்க வேண்டும்.

தலை மீது பனிக்கட்டிகள் நிறைந்த பிளாஸ்டிக் பைகளை வைத்து முதலுதவி செய்துவிட்டு, உடனடியாக கால்நடை மருத்துவரை நாடவேண்டும் என கொருக்கை கால்நடை மருத்துவர் க.சங்கர் தெரிவித்துள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

# பருவ மாற்றத்தால் தேயிலை உற்பத்தி சரிவு

மே 11,2012,00:24



புதுடில்லி:நடப்பு 2012ம் காலாண்டர் ஆண்டின் முதல் காலாண்டில், பருவ நிலை மாற்றத்தால் தேயிலை உற்பத்தி, 8.30 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலாண்டில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, சதவீதம் 13 சதவீதம் (9.44 கோடி கிலோ) குறைவாகும் என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

கணக்கீட்டு காலத்தில், நாட்டின் வடக்கு பகுதிகளில், மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்தி, 4.55 கோடி கிலோவிலிருந்து, 3.75 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

குறிப்பாக, அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில், இதன் உற்பத்தி, முறையே 2.72 கோடி கிலோவிலிருந்து, 1.98 கோடி கிலோவாகவும், 1.82 கோடி கிலோவிலிருந்து, 1.75 கோடி கிலோவாகவும் குறைந்துள்ளது. நாட்டின் தென் பகுதிகளில், தேயிலை உற்பத்தி, 4.88 கோடி கிலோவிலிருந்து, 4.45 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

## கரும்பு மகசூல் அதிகரிப்பு கரூர் கலெக்டர் பெருமிதம்

பதிவு செய்த நாள் : மே 11,2012,03:56 IST

கரூர்: கரூர் மாவட்டகலெக்டர் ÷ஷாபனா வெளியிட்ட செய்திக்குறிப்பில் உள்ளதாவது:
கரூர் மாவட்டத்தில் சராசரியாக 6,500 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு, 2011-12 ம் ஆண்டுகளில் 8,270 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கான 7,200 விட 1,070 ஹெக்டேர் அதிகம். நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் ஐந்து அடிக்கு இரண்டு அடி என்ற அளவில் நடப்பட்டு சரியான எண்ணிக்கையில் பயிர் எண்ணிக்கை பாரமரிக்கப்படுகிறது.
அதற்கு நீரில் கரையும் உரங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கரும்பு பூஸ்டர் என்னும் ஊட்டச்சத்து ஆகியவை 50 சதவீத மான்யத்தில் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்துக்காக 12 ம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 4.50 லட்சம் நிதி முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணை திட்டம் 200 ஹெக்டேரில் செயல்படுத்தப்படுகிறது. அதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 25,000 என்ற அடிப்படையில் நிதி பெறப்பட்டு, 50 சதவீத மான்யத்தில் நீரில் கரையும் உரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
கடந்த 2011-12 ம் ஆண்டு கரும்புக்கான சிறப்பு திட்டங்கள் விளைவாக ஒரு ஹெக்டேரில் கரும்பு சாகுபடி 91 மெட்ரிக் டன் என்பது 127 மெட்ரிக் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
கரூர் மாவட்டத்தில் கடந்த 2010-11 ம் ஆண்டில் 5.80 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி 2011-12 ம் ஆண்டில் 10 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஹெக்டேருக்கு ஒரு லட்சம் வரை வருமானம் கிடைக்கவும் வாய்ப்புண்டு.

---